Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

RS Polyclinic

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், செப்டம்பர் 03, 2026 | இதழ் 143

## நகராட்சிகளில் புதிய சாலைகள் அமைக்க ரூ. 1,850 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் - முதல்வர் அறிவிப்பு



சென்னை, 03 செப்டம்பர் 2026: முதல்வர் விஜய் பேரவையில் 110 விதியின் கீழ் இன்று பல அறிவிப்புகளை வெளியிட்டார். புதிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசிய முதல்வர், மீஞ்சூரில் 400 எம்எல்டி கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். வட சென்னையின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

தொடர்ந்து பேசிய அவர் ஆவடியில் ரூ.500 கோடியில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். மதுரையில் ரூ.2400 கோடியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். மதுரை, கடலூர் உள்பட பல பகுதிகளில் 33 கூட்டு குடிநீர் திட்டங்களை சீரமைக்க ரூ.300 கோடி ஒதுக்கப்படும் என்றார்.

சேலத்தில் திடக்கழிவிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் ரூ.547 கோடியில் செயல்படுத்தப்படும். நகராட்சிகளில் புதிய சாலைகள் அமைக்க ரூ. 1,850 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். நெல்லையில் திடக்கழிவில் இருந்து மின்சார உற்பத்தி செய்யும் திட்டம் ரூ.250 கோடியில் செயல்படுத்தப்படும். மாநிலம் முழுவதும் 250 புதிய பூங்காக்கள் அமைக்கப்படும் என முதல்வர் விஜய் அறிவித்துள்ளார். கடலூர் கடற்கரையில் ரூ.8 கோடியில் பாரம்பரிய நடைபாதை அமைக்கப்படும்.

விரைவில் ஒட்டுநர் உரிமத்தை டிஜிட்டல் முறையில் பதிவிறக்கம் செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும். போராட்டத்தில் ஈடுபட்டதற்காக விவசாயிகள், ஆசிரியர்கள் மீது போடப்பட்ட அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

## வருகிற 10ம் தேதி லண்டன் செல்கிறார் முதல்வர் விஜய்: 6 நாட்கள் தங்குகிறார்

சென்னை 03, செப்டம்பர் 2026: தமிழக முதல்வராக தவெக தலைவர் விஜய் கடந்த மே 10ம் தேதி பதவி ஏற்றார். தற்போது தமிழகத்தில் முக்கிய தொழில்கள் அனைத்தும் அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடகாவுக்கு செல்வதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. முதலீடுகள் குறைந்ததும் இதற்கு முக்கிய காரணம் என கூறப்படுகிறது. சமீபத்தில் சென்னையில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டுக்கு பத்திரிகையாளர்கள் அழைக்கப்படவில்லை. மாநாடு குறித்த செய்தி மற்றும் வீடியோவை மட்டும் வெளியிட்டனர். அதேநேரத்தில் ஒரு லட்சம் ரூபாயில் தொடங்கப்பட்ட நிறுவனம் ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதாக ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும் தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

இந்நிலையில், முதல்வர் விஜய் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் குழு வருகிற 10ம் தேதி லண்டன் செல்ல இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. விஜய் 16ம் தேதிதான் தமிழகம் திரும்புவதாகவும் கூறப்படுகிறது. லண்டனில் தொழிலதிபர்களுடன் சந்திப்பு, முதலீட்டாளர்களுடன் ஆலோசனை, புதிய ஒப்பந்தம் மேற்கொள்ள இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் முதல்வர் விஜய்யின் மனைவி சங்கீதா செங்கல்பட்டு நீதிமன்றத்தில் தொடர்ந்த விவாகரத்து வழக்கை சமீபத்தில் வாபஸ் பெற்றார். அவர் லண்டனில் இருப்பதாக கூறப்படு கிறது. இதனால், குடும்ப பிரச்னை குறித்தும் இந்த பயணத்தில் பேசப்படும் என்றும் தகவல் வெளியாகியுள்ளன. ஆனால் இதை அதிகாரிகள் உறுதிப்படுத்த மறுத்து வருகின்றனர்.

## எச்-4 விசாதாரர்களின் வேலை உரிமை ரத்து?.. அமெரிக்கா அடுத்த அதிரடி




சென்னை 03, செப்டம்பர் 2026: அமெரிக்காவில் எச்-1பி விசாதாரர்களின் கணவன் அல்லது மனைவிக்கு வழங்கப்படும் எச்-4 விசாவில் பணிபுரிவதற்கான உரிமையை ரத்து செய்ய அதிபர் டிரம்ப் நிர்வாகம் பரிசீலித்துள்ளது. அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறாதவர்கள் தங்கி பணியாற்ற எச்-1பி விசா வழங்கப்படுகிறது. எச்-1பி விசாதாரர்களை சார்ந்திருக்கும் அவர்களின் கணவன் அல்லது மனைவி மற்றும் 21 வயதுக்கு உட்பட்ட திருமணமாகாத குழந்தைகளுக்கு எச்-4 விசா வழங்கப்படும். 2014க்கு முன்பு வரையிலும் எச்-4 விசாதாரர்கள் அமெரிக்காவில் பணிபுரிய சட்ட உரிமை இல்லை.

இதில் திருத்தம் செய்து எச்-1பி விசா பெற்றவர்கள் நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பித்து காத்திருப்பவர்களின் துணைவர்கள் வேலை செய்வதற்கான அனுமதி விண்ணப்பித்து பெறலாம் என 2015ல் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த அனுமதியை 90 சதவீதத்திற்கும் மேல் இந்தியர்கள் பெற்று வருகின்றனர். அதிலும் குறிப்பாக எச்-1பி விசாதாரர்களின் மனைவிகளே எச்-4 விசாவில் வேலை அனுமதி பெற்று அமெரிக்காவில் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், எச்-4 விசாதாரர்களுக்கு வழங்கப்படும் சட்டப்பூர்வ வேலை அனுமதியை ரத்து செய்வதற்கான நடைமுறைகளை அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு துறை தொடங்கி உள்ளது. இதுதொடர்பாக அதன் இணையதளத்தில் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் டிரம்பின் முதல் ஆட்சிக்காலத்தில் கடந்த 2017ல் இதே போன்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு, 2021ல் அது கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கடந்த ஆட்சியில் போடப்பட்ட ஆசிரியர்கள், விவசாயிகள் மீதான அனைத்து வழக்குகளும் வாபஸ்: முதல்வர் விஜய் அறிவிப்பு



சென்னை, 03 செப்டம்பர் 2026: விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடியபோது அவர்கள் மீது கடந்த ஆட்சியாளர்களால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும் என தமிழக சட்டசபையில் முதலமைச்சர் விஜய் அறிவித்தார்.

தமிழக சட்டசபையில் இன்று முயூலமைச்சர் விஜய் விதி 110ன் கீழ் அடுக்கடுக்கான அறிவிப்புகளை வெளியிட்டார்.

அப்போது ஆசிரியர்கள், விவசாயிகள் மீது கடந்த ஆட்சி காலங்களில் போடப்பட்ட அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என விதி 110ன் கீழ் முதல்வர் அறிவித்தார். அவர் கூறியதாவது:

நமது அரசு பொறுப்பேற்ற மே 10ம் தேதி முதல், சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஜனநாயக நெறிமுறைகளின் அடிப்படையில் வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலற்ற நேர்மையான அரசாக சேவையாற்றி வருகிறது. மக்களின் கருத்துரிமை, போராட்ட உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளை மதித்து, சட்டத்திற்குட்பட்டு மக்கள் தங்கள் கோரிக்கைகளை முன்வைப்பதற்கான சூழலை இந்த அரசு உறுதிப்படுத்தி வருகிறது.

ஆனால், கடந்த ஆட்சிக் காலங்களில் தங்களது வாழ்வாதாரம், உரிமைகள் மற்றும் சமூக நலன் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடிய விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் மீது கடந்த 2021ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஜனநாயக முறையில் குரல் கொடுத்த மக்களுக்கு உரிய அனுமதிகள் மறுக்கப்பட்டதோடு, இன்று 'ரையிலும் அவர்கள்மீது பதியப்பட்ட வழக்குகளால் மிகுந்த சிரமத்திற்கும் ஆளாகியுள்ளனர்.

உழவர்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உணவுப் பாதுகாப்பிற்கும் அடிப்படையாக விளங்கும் சமூகத்தின் முதுகெலும்பாகப் போற்றப்பட வேண்டியவர்கள் ஆவர். அவ்வாறான உழவர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்திய பல்வேறு போராட்டங்களுக்காக அவர்கள்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் இன்றும் நிலுவையில் உள்ளன.

அதேபோன்று, திருவண்ணாமலை மாவட்டம், சிப்காட் தொழிற்பேட்டை எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்ட விவசாயிகள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டதுடன், சில விவசாயிகள் மீது குண்டர் தடுப்புச் சட்டமும் போடப்பட்டது.

பரந்தூர் விவசாயிகள்

அதேபோன்று, பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு எதிராக, விவசாயிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். விவசாய நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்ற நோக்கத்தோடு, விமான நிலையத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று போராடிய விவசாயிகள் மீதும் முந்தைய அரசால் மனிதநேயமற்ற வகையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

விவசாயிகள், ஆசிரியர்கள் மீது போட்ட வழக்குகள் வாபஸ்

கல்வியின் ஒளியை ஏற்றி சமூக முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் ஆசிரியர்கள் நாட்டின் வளர்ச்சியின் அடித்தளமாக உள்ளனர். ஆசிரியர்கள் தங்களது நியாயமான கோரிக்கைகள் மற்றும் உரிமைகளுக்காக ஜனநாயக முறையில் போராடிய போதும், அவர்கள் மீதும் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதனால் ஆசிரியர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். எனவே, ஜனநாயக உரிமைகளை மதிக்கும் நமது அரசு, கடந்த ஆட்சியாளர்களால் விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடியபோது அவர்கள்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மனிதநேய அடிப்படையிலும், ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையிலும் அனைத்து வழக்குகளையும் திரும்பப்பெற முடிவு செய்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் மற்றும் ஆசிரியர்களுக்கும், அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்கும் இவ்வரசு உறுதுணையாக நிற்கும்.

இந்த நடவடிக்கை ஜனநாயக உரிமைகளை மேலும் வலுப்படுத்துவதோடு, சாமானிய மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான நம்பிக்கையை உறுதிப்படுத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு முதலமைச்சர் விஜய் கூறியுள்ளார்.

## தரவு மையங்களை அமைப்பதற்கு உலகின் சிறந்த இடமாக இந்தியா திகழ்கிறது: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல்



சென்னை 03, செப்டம்பர் 2026: இந்தியாவின் தரவு மைய சூழலை விரிவுபடுத்துவதற்காக எளிதாக வர்த்தகம் செய்வது குறித்த தலைமைச் செயல் அதிகாரிகள் வட்டமேசை கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமையேற்று பேசிய மத்திய வர்த்தகம், தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், தரவு மையங்களை அமைப்பதற்கு உலகின் சிறந்த இடமாக இந்தியா திகழ்கிறது என்று கூறினார். தரவு மையத்துறையை மேலும் ஊக்குவிப்பது, இந்தியாவில் எளிமையாக வர்த்தகம் செய்வதை மேம்படுத்துவது குறித்து இத்துறையைச் சேர்ந்தவர்களுடன் உரையாடுவதற்கு இந்த வட்டமேசை கூட்டம் பயனுள்ள தளத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

உலகளாவிய நிச்சயமற்றத்தன்மை, ஏற்ற, இறக்கங்களுக்கு இடையே நாட்டின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் குறித்து நம்பிக்கை தெரிவித்த திரு கோயல், நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் நாடு 7.8 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளதாக சுட்டிக் காட்டினார்.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmail.com
உள்ளது உள்ளபடி



## மேம்பட்ட உற்பத்தித் துறைக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பணியாளர் மேம்பாட்டை முன்னெடுக்கும் லாம் ரிசர்ச்

சென்னை 03, செப்டம்பர் 2026: குறைக்கடத்தி உற்பத்தி உபகரணங்கள் மற்றும் தீர்வுகள் துறையில் உலகளாவிய முன்னணி நிறுவனமான லாம் ரிசர்ச் கார்ப்பரேஷன் (நாஸ்டாக்: எல்ஆர்சிஎக்ஸ்), சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு தொழில்துறைக்குத் தேவையான திறன்களை வழங்குவதையும், மேம்பட்ட உற்பத்தித் துறையில் அவர்களுக்கான வேலைவாய்ப்புகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட உத்திசார் முன்னெடுப்பின் மூலம், பணியாளர் மேம்பாட்டிற்கான தனது உறுதிப்பாட்டை மேலும் முன்னெடுத்து வருகிறது.

இந்தியா முழுவதும் உயர் மதிப்புடைய, தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தி மையங்களை உருவாக்குவதில் இந்தியா தொடர்ந்து கவனம் செலுத்தி வரும் நிலையில், மின்னணுவியல், விண்வெளி, குறைக்கடத்தி உபகரணங்கள், துல்லியப் பொறியியல், மின்சார வாகனங்கள் மற்றும் மருத்துவச் சாதனங்கள் உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் பல்வேறு தொழில்துறைத் தொகுப்புகள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

இந்தியாவைத் தளமாகக் கொண்ட நிறுவன சமூகப் பொறுப்பு முன்னெடுப்பாகத் தொடங்கப்பட்டுள்ள லாம் ரிசர்ச் திறன் மேம்பாட்டுத் திட்டம், இந்தியாவின் மேம்பட்ட உற்பத்தித் துறைக்கான திறமையாளர்களின் தொடரை வலுப்படுத்தும் வகையில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஆதரவை வழங்கும். இதன் மூலம் திறன் பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், வேலைவாய்ப்புக்கான தயார்நிலையை மேம்படுத்துதல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பணிச்சூழல்களுக்கு ஆதரவளித்தல் ஆகியவை நோக்கங்களாகக் கொண்டுள்ளன. இத்திட்டத்தின் முன்னோட்ட செயல்படுத்தல் பெங்களூருவில் மே 2026-ல் தொடங்கியது. பயனாளிகளை அணுகுதல் மற்றும் பயிற்சி வழங்குதல் ஆகிய பணிகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன.

திட்டத்தின் மேலோட்டம்

லாம் ரிசர்ச் திறன் மேம்பாட்டுத் திட்டம், மூலதனப் பொருட்கள் திறன் மேம்பாட்டு கவுன்சிலின் கீழ், தேசிய திறன் தகுதிக் கட்டமைப்பு (என்எஸ்க்யூஎஃப்) நிலை 3 தர நிலையுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை லாம் ரிசர்ச்சின் செயலாக்கக் கூட்டாளர் நிர்வகித்து வருகிறார். இந்தக் கூட்டாளர், உற்பத்தி வரிசை இயக்குநர் பணிகளுக்காகத் தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்ட, தொழில் துறையின் தேவைகளுக்கு ஏற்ப அமைந்த 240 மணி நேர தீவிரப் பயிற்சித் திட்டத்தை வழங்குகிறார்.

இத்திட்டத்தின் முக்கியப் பயிற்சிக் கூறுகளில் மின்னணுவியல் மற்றும் இயந்திரப் பொருத்துதலின் அடிப்படைகள்; உற்பத்தித் தள செயல்முறைகள்; தரம் மற்றும் ஆய்வுச் செயல்முறைகள்; பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் விதிமுறை இணக்கம்; பணியிடம் மற்றும் வேலைவாய்ப்புத் திறன்கள் ஆகியவை அடங்கும்.

மேலும், கட்டமைக்கப்பட்ட மதிப் பீடுகள், நேரடி செயல் முறைப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் தயார்நிலைப் பயிற்சிப் பிரிவுகளும் இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும் பங்கேற்பாளர்களுக்கு, தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (என்எஸ் டிசி) இணைப்பு பெற்ற மதிப்பீட்டு நிறுவனத் தின் மூலம், உற்பத்தித் துறையின் யூவைகளுக்கு ஏற்ப தொழில் துறையால் அங்கீகரிக் கப்பட்ட சான்றிதழ் வழங்கப் படும். செயலாக்கக் கூட்டாளர் வாயிலாக, வெற்றிகரமாகத் தேர்ச்சி பெறும் விண்ணப்ப தாரர் களுக்கு உற்பத்தி வரிசை இயக்குநர் பணிகளுக்கான வேலை வாய்ப்பு வாய்ப்பு ஆதரவும் வழங்கப்படும்.

## டால்மியா பாரத் அறக்கட்டளை தமிழ்நாட்டில் நீர் பாதுகாப்பு மற்றும் விவசாயத் துறையின் மீள்திறனை வலுப்படுத்துகிறது




சாத்தூர் 03, செப்டம்பர் 2026: உள்ளூர் நீர் சேமிப்பை வலுப்படுத்தவும், நீர் பற்றாக்குறையைச் சமாளிக்கும் சமூகத்தின் திறனை மேம்படுத்தவும், டால்மியா பாரத் லிமிடெட் நிறுவனத்தின் சமூகப் பொறுப் புணர்வுப் பிரிவான ‘டால்மியா பாரத் அறக் கட்டளை’ (டிபிஎஃப்), தமிழ்நாட்டின் சாத்தூர் பகுதியில் உள்ள சுப்பிரமணியபுரம் கிராமத்தில் குளம் தூர்வாரும் பணியைத் தொடங்கியது. இந்தப் பணியின் மூலம், அக்குளத்தின் நீர் சேமிப்புத் திறன் ஒரு முறை நிரம்பும்போது சுமார் 9,500 கன மீட்டராக அதிகரிக்கும் என்றும், இதன் விளைவாக விவசாயம் மற்றும் வீட்டுத் தேவைகளுக்கான நீர் இருப்பு மேம்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சீரமைக்கப்படும் இந்த நீர் ஆதாரம், அக்கிராமத்தில் உள்ள சுமார் 75 ஏக்கர் விவசாய நிலங்களுக்கும் 40 விவசாயிகளுக்கும் பயனளிக்கும்; அதேவேளையில், சுமார் 50 குடும்பங்கள் தங்கள் வீட்டுத் தேவைகளுக்கான மேம்பட்ட நீர் வசதியைப் பெறுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இது கோடைக்காலத்தில் கால்நடைகளுக்குத் தேவையான குடிநீரை உறுதி செய்வதோடு, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும் உதவும்.

இந்த முன்னெடுப்பு குறித்து எம்சிடபிள்யு-வின் பிரிவுத் தலைவர் திரு. ராபர்ட் கூறுகையில், “ஊரக வாழ்வாதாரங்களின் உறுதித்தன்மைக்கு நீர் பாதுகாப்பு மிக அவசியமானது.

சுப்பிரமணியபுரத்தில் உள்ள குளத்தைச் சீரமைப்பதன் மூலம், வீட்டுத் தேவை மற்றும் விவசாயத் தேவைகள் ஆகிய இரண்டிற்கும் உதவும் ஒரு முக்கிய சமூக வளத்தை நாங்கள் வலுப்படுத்துகிறோம். அக்குளத்தின் நீர் சேமிப்புத் திறனை அதிகரிப்பது விவசாயிகளுக்குச் சிறந்த நீர்ப்பாசன வசதியை அளிப்பதோடு, உள்ளூர் குடும்பங்களுக்குத் தடையற்ற நீர் கிடைக்கவும் உதவும். நீடித்த நன்மைகளை உருவாக்கும் நடைமுறைக்கு ஏற்ற, சமூகத்தின் யூங்களிப்புடன் கூடிய தீர்வுகளைச் செயல்படுத்துவதில் எங்களுக்கிருக்கும் உறுதிப்பாட்டை இந்த முயற்சி பிரதிபலிக்கிறது,” என்று தெரிவித்தார்.

## 20 லட்சம் மக்களைச் சென்றடைந்துள்ள நெக்ஸ்ட் பாரத் வென்ச்சர்ஸ் ; சமூக தாக்கத்தை நிதிச் செயல்பாட்டோடு இணைக்கும் இம்பேக்ட் அறிக்கையை (இம்பேக்ட் ரிப்போர்ட்) வெளியிட்டது

சென்னை 03, செப்டம்பர் 2026: ஜப்பானிய முதலீட்டு ஆதரவு பெற்ற இம்பேக்ட்-ஃபர்ஸ்ட் நிறுவனமான ‘நெக்ஸ்ட் பாரத் வென்சர்ஸ்’ (என்பிவி), தனது ‘இம்பேக்ட் ரிப்போர்ட் 2026’-ஐ இன்று வெளியிட்டுள்ளது. இந்தியாவின் கிராமப்புற மற்றும் முறைசாரா பொருளாதாரத்தில் உள்ள அடுத்த 100 கோடி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வணிகங்கள், எவ்வாறு வணிக ரீதியாக சாத்தியமான மற்றும் அளவிடக் கூடிய நிறுவனங்களை உருவாக்கும் அதே வேளையில், அளவிடக் கூடிய சமூகத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்பதை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. நெக்ஸ்ட் பாரத் நிறுவனத்தின் முதலீட்டிற்குப் பிறகு, முக்கிய துறைகளில் ஏற்பட்டுள்ள வலுவான வர்த்தக வளர்ச்சியுடன் சேர்த்து, இவர்களின் 21 முதலீட்டுப் பங்களிப்பு நிறுவனங்கள் மூலம் இதுவரை 20 லட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர் எனவும், தென்னிந்தியாவைச் சேர்ந்த ஸ்டார்ட் அப்கள் மட்டும் 3 லட்சத்திற்கும் அதிகமான மக்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும் இந்த அறிக்கை பதிவிட்டுள்ளது.




இந்தியாவில் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் தொழில்முனைவோருக்காக, ‘வை காம்பினேட்டர்’ மாதிரியிலான ஒரு தொழில் சூழலை (எகோசிஸ்டம்) உருவாக்கும் இலக்குடன் என்பிவி நிறுவனம் இதுவரை ரூ.20.76 கோடி தொடக்க நிதியை (Seed funding) ஒதுக்கியுள்ளது. இதில், ‘பிளாக்ஃப்ராக் டெக்னாலஜிஸ்’ நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூ.9 கோடி முதலீடும் அடங்கும். இந்நிறுவனத்தின் ‘எம்வோலியோ’ சாதனம், தொலைதூர மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறைந்த பகுதிகளில் தடுப்பூசிகளை கடைசி வரை பாதுகாப்பாகக் கொண்டு சேர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட, இந்தியாவின் முதல் காப்புரிமை பெற்ற மற்றும் டபிள்யுஹெச்ஓ-பிக்யூஎஸ் தகுதிச் சான்று பெற்ற இயங்குநிலை குளிர்ச்சி தடுப்பூசி கடத்தி (active-cooled vaccine carrier) ஆகும். இந்த தொழில்நுட்ப தீர்வின் மூலம் இந்தியாவில் இதுவரை 2,51,512 பயனாளிகள் பலனடைந்துள்ளதுடன், ஆப்பிரிக்க நாடுகளிலும் இது உலகளாவிய அளவில் செயல்பட்டு வருகிறது.

## 12 வயது சென்னை பள்ளி மாணவன் தனது முதல் காமிக்ஸ் புத்தகத்தை வெளியிட்டார்

சென்னை, 03 செப்டம்பர் 2026: சென்னை அண்ணா நகரில் உள்ள எஸ்பிஓஏ ஸ்கூல் & ஜூனியர் காலேஜ் பள்ளியில் 7ஆம் வகுப்பு பயிலும் 12 வயது எஸ். கஹன்ஷ்வா, தனது முதல் காமிக்ஸ் புத்தகமான ‘கே-காமிக்ஸ் - கஹன்ஷ்வாஸ் காமிக்ஸ்’-ஐ ஆகஸ்ட் 29, 2026 அன்று சென்னை டி.நகரில் உள்ள எம் சென்ட்ரல்-ல் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் வெளியிட்டார்.

இந்தப் புத்தகத்தை பிரபல எழுத்தாளரும், முன்னாள் மூத்த ஐக்கிய நாடுகள் சபை தூதருமான திரு. ஆர். கண்ணன் அவர்கள் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் ரோட்டேரியன்கள், குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நல விரும்பிகள் கலந்து கொண்டு இளம் எழுத்தாளரை வாழ்த்தினர்.

வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்ட கஹன்ஷ்வா, தொடர்ந்து நூலகங்களுக்குச் சென்று பல்வேறு வகையான புத்தகங்களை வாசித்து வருகிறார். கதைகள் மற்றும் கதாபாத்திரங்கள் மீதான அவரது ஆர்வமும், கற்பனைத் திறனும் அவரை சொந்தமாக கதைகளை உருவாக்கத் தூண்டின. அந்தக் கற்பனைகள் படிப்படியாக ஒரு முழுமையான காமிக்ஸ் புத்தகமாக உருவெடுத்தன.





கே-காமிக்ஸ் - கஹன்ஷ்வாஸ் காமிக்ஸ்

‘கே-காமிக்ஸ் - கஹன்ஷ்வாஸ் காமிக்ஸ்’ என்பது இளம் வாசகர்களுக்காக உருவாக்கப்பட்ட ஐந்து கற்பனை நிறைந்த சாகசக் கதைகளின் யூகுப்பாகும். இந்தக் கதைகள் கஹன்ஷ்வாவின் படைப்பாற்றல், ஆர்வம், கற்பனை மற்றும் கதை சொல்லும் திறனை வெளிப்படுத்துகின்றன. இந்தப் புத்தகத்தின் மற்றொரு சிறப்பு அம்சமாக, கஹன்ஷ்வா பல்வேறு செயற்கை நுண்ணறிவு (ஏஐ) கருவிகளை பயன்படுத்தி கதாபாத்திரங்கள் மற்றும் கதைகளுக்கான விளக்கப்படங்களை உருவாக்கி, தனது கற்பனை உலகிற்கு உயிரூட்டியுள்ளார்.














பாரம்பரியமான கதை சொல்லலுடன் வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பத்தை இணைத்து, ஒரு இளம் படைப்பாளர் தனது எண்ணங்களை எவ்வாறு புதுமையான முறையில் வெளிப்படுத்த முடியும் என்பதற்கு இந்தப் புத்தகம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. இந்தப் புத்தகம் கண்ணதாசன் பதிப்பகம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ஆன்லைன் தளங்களிலும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## வீட்டு உணவை உண்ணும் நாய்களின் செரிமானப் பிரச்சனைக்கு தீர்வு:பெடிகிரிடி அறிமுகப்படுத்தும் ‘ஹெல்தி பெல்லி’

சென்னை, 03 செப்டம்பர் 2026: வளர்ப்பு பிராணிகளுக்கான உணவுத்துறையில் இந்தியாவின் முன்னணி நிறுவனமான மார்ஸ் பெட் நியூட்ரிஷன், நாய்களுக்கான அதன் பிரபல உணவு பிராண்டான பெடிகிரிடி - ன் கீழ், வளர்ந்த நாய்களின் ஆரோக்கியமான செரிமானத்திற்காக ‘பெடிகிரிடி ஹெல்தி பெல்லி’ என்ற யூயாரிப்பை அறிமுகம் செய்துள்ளன. இது, முழுமையான மற்றும் சமச்சீரான உணவை நாய்களுக்கு வழங்குவதன் மூலம் செரிமானத்திற்கு பெரிதும் உதவும்.

வயிற்றுக்கு ஏற்ற பொருட்களான பரங்கிக்காய் மற்றும் சர்க்கரைவள்ளிக் கிழங்கு; எளிதில் செரிமானமாகும் கோழி இறைச்சி மற்றும் முட்டையின் புரதங்கள்; மற்றும் செரிமானத்தை சீராக்கவும், குடலில் நல்ல பாக்டீரியாக்களை அதிகரிக்கவும், நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தவும் உதவும் ப்ரீபயாடிக்குகள் மற்றும் நார்ச்சத்துக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இத்தயாரிப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தியாவின் முதல் ‘வயிறு வடிவ’ உணவுத் துண்டுகளையும் பெடிகிரிடி அறிமுகப்படுத்துகிறது. நாய்களின் செரிமான ஆரோக்கியத் தேவையை உணர்த்தும் வகையில் இந்த தனித்துவமான வடிவம் உருவாக்கப்பட்டுள்ளது.




இந்தியாவில், வீடுகளில் செல்லப் பிராணியாக நாய்களை வளர்க்கும் பெற்றோர் களிடையே காணப்படும் ஒரு மிகப்பெரிய கவலைக்கு தீர்வாக இந்த அறிமுகம் அமைந்துள்ளது. நடத்தப்பட்ட ஒரு ஆய்வில்*, வீட்டில் சமைத்த உணவை வழங்குபவர்களில் சுமார் நான்கில் ஒரு பகுதியினர் (26%) தங்கள் நாய்களுக்கு செரிமானப் பிரச்சினை கள் ஏற்படுவதைக் கவனித்ததாக தெரிவித்துள்ளனர். செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்கள் தங்கள் நாய்களின் ஆரோக்கியத்தில் அதிக கவனமும், அக்கறையும் செலுத்தி வருவதால், பிரச்சினைகள் வந்த பிறகு தீர்வு காண்பதை விட, அவற்றின் குறிப்பிட்ட உடல்நலத் தேவைகளுக்கு முன்கூட்டியே ஆதரவளிக்கும் சிறந்த ஊட்டச்சத்தைக் கொண்ட உணவுகளை வழங்குவதையே அதிகம் நாடுகின்றனர்.

## நடிகர்கள் த்ரிஷா கிருஷ்ணன், ராதிகா சரத்குமார், அபர்ணா பாலமுரளி நடிப்பில், ராஜா கிருஷ்ணா மேனன் இயக்கத்தில், பனோரமா ஸ்டுடியோஸ் நிறுவனம், லோகோமோட்டிவ் குளோபல் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கும் முதல் தமிழ் படத்தின் படப்பிடிப்பு லண்டனில் தொடங்கியது!

சென்னை, 03 செப்டம்பர் 2026: பனோரமா ஸ்டுடியோஸ் நிறுவனம், லோகோமோட்டிவ் குளோபல் நிறுவனத்துடன் இணைந்து, தமிழ் திரையுலகில் தனது முதல் திரைப் படத்தை தயாரிக்கிறது. பிரபல இயக்குநர் ராஜா கிருஷ்ண மேனன் இயக்கும் இந்தப் புதிய உளவியல் திகில் திரைப் படத்தில் நடிகைகள் த்ரிஷா கிருஷ்ணன், ராதிகா சரத்குமார் மற்றும் அபர்ணா பாலமுரளி ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இன்னும் தலைப் பிடப்படாத இப்படம், டார்க் சைக்கலாஜிக்கல் ஜானரில் உருவாகிறது. இப்படத்தின் முழு கட்ட படப்பிடிப்பு தொடங்கியுள்ளது.

தமிழ், மலையாளம் மற்றும் இந்தி திரையுலகில் தங்களது திறமையான நடிப்பால் கவனம் ஈர்த்த மூன்று முன்னணி நடிகர்கள் இப்படத்தில் ஒன்றிணைந்துள்ளனர். ‘96’, ‘விண்ணைத்தாண்டி வருவாயா’, ‘கில்லி’, ‘பொன்னியின் செல்வன்’ உள்ளிட்டப் பல படங்களில் தனது நடிப்பு திறனை நிரூபித்து முன்னணி நடிகையாக வலம் வருகிறார் த்ரிஷா. ரசிகர்களால் ‘கலையரசி’ என அன்போடு அழைக்கப்படும் நடிகை ராதிகா சரத்குமார் பல தசாப்தங்களாக தனது சிறப்பான நடிப்பால் ரசிகர்களை கவர்ந்து வருகிறார். ‘கிழக்கு சீமையிலே’, ‘பசும் பொன்’, ‘தங்க மகன்’, ‘தெறி’ உள்ளிட்ட பல படங்களில் மறக்க முடியாத கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். அதேபோல் ‘சூரரைப் போற்று’, ‘மகேஷிண்டே பிரதிகாரம்’, ’8 தோட்டாக்கள்’ உள்ளிட்ட படங்களில் தனது சிறப்பான நடிப்பை அபர்ணா பாலமுரளி பதிவு செய்துள்ளார்.

லோகோமோட்டிவ் குளோபலின் ஜேனே ஜிங் பார்ட்னரும் தயாரிப்பாளருமான சுந்தர் ஆரோன் மற்றும் தயாரிப்பாளர் விகாஸ் ஷர்மா பகிர்ந்து கொண்டதாவது, “எல்லைகளைக் கடந்து பயணிக்கும் அதே நேரத்தில், மனித உணர்வுகளை வலுவாக சொல்லும் கதைகளே லோகோமோட்டிவ்



குளோபலின் தேர்வு. திகில், மிஸ்ட்ரி மற்றும் உணர்வுப்பூர்வமான தருணங்களைக் கொண்ட இந்த தமிழ் மொழி சைக்கலாஜிக்கல் திரில்லர் திரைப் படத்தின் கதை எங்களை உடனடியாக கவர்ந்தது. த்ரிஷா கிருஷ்ணன், ராதிகா மேடம் மற்றும் அபர்ணா பாலமுரளி உள்ளிட்ட திறமையான நடிகர்கள் முன்னணி கதாபாத்திரங்களில் நடிக்க, லண்டனில் படமாக்கப்படும் இப்படம், நாங்கள் உருவாக்கி வரும் தரமான திகில் திரைப் படங்களின் வரிசையில் முக்கியமானதாக மாறியுள்ளது.

ராஜா கிருஷ்ண மேனன், குமார் ஜி மற்றும் பனோரமா ஸ்டூடியோஸ் ஆகியோரை ஒரே படத்தில் இணைத்து, இத்தகைய தனித்துவமான கதையை உருவாக்குவது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. இந்த திரைப் படத்தை பார்வையாளர்களிடம் கொண்டு சேர்க்க ஆவலுடன் உள்ளோம்" என்றனர்.

சுவாரஸ்யமான கதைக்களம், திறமையான நடிகர்கள் மற்றும் தனித்துவமான கதை சொல்லலுக்குப் பெயர் பெற்ற இயக்குநர் என, இப்படம் பெரிய திரையில் ரசிக்கும் வகையிலான பிரம்மாண்டமான சினிமா அனுபவமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் பெயரிடப்படாத இப்படம் குறித்த கூடுதல் தகவல்கள் உரிய நேரத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

## வேதாந்தா வழங்கும் ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழா : புத்தகங்கள், யோசனைகள் மற்றும் உரையாடல்களுடன் இந்தியாவின் தொடர்பை 20 ஆண்டுகளாக உருமாற்றியதன் அடையாளம்

சென்னை, 03 செப்டம்பர் 2026: ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழா ஜனவரி 2027 இல் தனது மைல்கல் 20வது பதிப்பைக் கொண்டாடத் தயாராகி வரும் நிலையில், உலகின் மீதான நமது புரிதலை உருவாக்கும் புத்தகங்கள், யோசனைகள் மற்றும் உரையாடல்களில் ஈடுபட எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், கலைஞர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஒன்றிணையும் இடங்களை உருவாக்கிய இரண்டு தசாப்தங்களை இந்த திருவிழா குறிக்கிறது.

கடந்த இரண்டு தசாப்தங்களில், ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழா ஜெய்ப்பூரில் உள்ள எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்களின் கூட்டத்திலிருந்து உலகின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய தளங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது, இந்தியா மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள பார்வையாளர்களால் இலக்கியம் அனுபவிக்கப்படும், விவாதிக்கப்படும் மற்றும் அணுகப்படும் முறையை மாற்றியமைத்துள்ளது.

2008 இல் தொடங்கப்பட்டதிலிருந்து, இந்த விழா 8,000 க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் மற்றும் கலைஞர்களை உபசரித்துள்ளது, 5 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களை நேரில் வரவேற்றுள்ளது, மேலும் டிஜிட்டல் தளங்கள், ஒளிபரப்பு கூட்டாண்மைகள் மற்றும் மீடியா நெட்வொர்க்குகள் மூலம் 1 பில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களைச் சென்றுடைந்துள்ளது.

அளவிற்கும் மேலாக, இலக்கியத்தையும் யோசனைகளையும் பொது உரையாடல்களுக்குள் கொண்டு வரும் திறனில் இந்த விழாவின் நீடித்த தாக்கம் உள்ளது. பல்வேறு குரல்களுக்கு ஒரு திறந்த மற்றும் அணுகக்கூடிய தளத்தை உருவாக்குவதன் மூலம், ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழா பாரம்பரிய பதிப்பகம் மற்றும் கல்வி வட்டங்களுக்கு அப்பால் இலக்கிய ஈடுபாட்டை விரிவு படுத்த உதவியது, புத்தகங்கள், யோசனைகள் மற்றும் அறிவுசார் உரையாடல்களை பரந்த பார்வையாளர்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றியுள்ளது.




இருபது ஆண்டுகளில், இந்த திருவிழா இந்தியாவின் சமகால இலக்கிய மற்றும் கலாச்சார அமைப்பை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்துள்ளது, இலக்கியம், வரலாறு, அரசியல், அறிவியல், தத்துவம், கலைகள் மற்றும் சமகால கலாச்சாரம் ஆகியவற்றில் உரையாடல்கள் நகரும் ஒரு பகிரப்பட்ட இடத்தை உருவாக்கியுள்ளது. ஜெய்ப்பூரில் இருந்து உலகிற்கு, இந்த திருவிழா அமெரிக்கா, யுனைடெட் கிங்டம், கனடா, ஸ்பெயின், ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு, மாலத்தீவுகள் மற்றும் அயர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் 15க்கும் மேற்பட்ட பதிப்புகளுடன் ஒரு சர்வதேச நெட்வொர்க்காக விரிவடைந்துள்ளது. இந்த பதிப்புகள் மூலம், ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழா ஒரு கலாச்சார பாலமாக உருவெடுத்துள்ளது, இந்திய இலக்கிய மரபுகளை சர்வதேச பார்வையாளர்களுடன் இணைக்கிறது அதே வேளையில் உலகளாவிய உரையாடல்களை இந்தியப் பார்வைகளுடன் விவாதத்திற்கு கொண்டு வருகிறது. ஃபெஸ்டிவலின் தாக்கம் அதன் சொந்த பதிப்புகளுக்கு அப்பால் விரிவடைந்துள்ளது, இந்தியா, இந்த பிராந்தியம் மற்றும் உலகெங்கிலும் உள்ள 300 க்கும் மேற்பட்ட இலக்கிய கூட்டங்கள் மற்றும் திருவிழாக்கள் ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழா வளர்க்க உதவிய திறந்த இலக்கிய பரிமாற்ற கலாச்சாரத்திலிருந்து உத்வேகம் பெற்றுள்ளன. ஒன்றாக, இந்த தளங்கள் எழுத்தாளர்கள், வாசகர்கள் மற்றும் யோசனைகளை பரந்த பொது உரையாடல்களுக்கு கொண்டு வருவதில் இலக்கிய திருவிழாக்களின் வளரும் பங்கைப் பிரதிபலிக்கின்றன.

## காங்கிரஸ் போராட்டத்திற்கு எதிர்வினையாக ராகுலின் உருவப் படத்தை வைத்து ‘புத்தி சுத்தி’ யாகம்: பாஜக செயலால் புதிய சர்ச்சை

சென்னை, 03 செப்டம்பர் 2026: உத்தரகாண்டில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் ஞருவப் படத்தை வைத்து பாஜகவினர் ‘புத்தி சுத்தி’ யாகம் நடத்திய சம்பவம் தேசிய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உத்தரகாண்ட் மாநிலம் ஹல்த்வானியில் கடந்த ஆகஸ்ட் 8ம் தேதி காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பங்கேற்ற பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது. கார்கே சென்று திரும்பிய பிறகு அந்த இடம் புனித நீர் தெளித்து ‘சுத்திகரிப்பு’ செய்யப்பட்டதாக சர்ச்சை வெடித்தது. இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, ‘சுத்திகரிப்பு சடங்கு என்பது தீண்டாமையின் மற்றொரு வடிவம்’ என்று குற்றம்சாட்டியதுடன், இதற்கு காரணமானவர்கள் மீது எஸ்சி, எஸ்டி சட்டத்தின் கீழ் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்நிலையில், ராகுல் காந்தியின் கருத்து தலித் மக்களின் மனதை புண்படுத்தும் வகையில் இருப்பதாகக் கூறி, ஸ்ரீராம் சேனா தொண்டு அறக்கட்டளையைச் சேர்ந்த அமித் குமார் என்பவர் கொடுத்த புகாரின் பேரில், ராகுல் காந்தி மீது எஸ்சி, எஸ்டி தடுப்புச் சட்டம் மற்றும் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 196 ஆகியவற்றின் கீழ் கடந்த சில தினங்களுக்கு முன் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியினர் டெல்லி, கர்நாடகா, சண்டிகர் மற்றும் உத்தரகாண்டில் முழு வீச்சில் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இந்த சூழலில், டேராடூனில் உள்ள கடிகார கோபுரம் அருகே அமைந்துள்ள பஞ்சாயத்து கோயில் வளாகத்தில் பாஜகவினர் ஒன்று திரண்டு, ராகுல் காந்தியின் புகைப்படத்தை வைத்து ‘புத்தி சுத்தி’ யாகம் நடத்தினர். இதில் பாஜகவின் எஸ்.சி. பிரிவு மாநில தலைவர் மற்றும் இணை அமைச்சரான பல்வீர் குனியாலா உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

அப்போது பாஜக தலைவர்கள், ‘2027ம் ஆண்டு நடைபெற உள்ள உத்தரகாண்ட் சட்டசபை தேர்தலை மனதில் வைத்து, தவறான தகவல்களை பரப்பி மக்களிடையே சாதி ரீதியான பிளவை ஏற்படுத்த ராகுல் காந்தி முயற்சி செய்கிறார். அவருக்கு நற்புத்தி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த யாகம் நடத்தப்பட்டது’ என்று தெரிவித்தனர். இச்சம்பவம் உத்தரகாண்ட் மாநிலத்தில் இரு கட்சிகளுக்கும் இடையே மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன்,
செப்டம்பர் 03, 2026

# கார்த்தி நடிக்கும் 'சர்தார் 2' படத்தின் இசை மற்றும் முன்னோட்டம் வெளியீடு

சென்னை, 03 செப்டம்பர் 2026: பிரின்ஸ் பிக்சர்ஸ் மற்றும் ஐ வி ஒய் என்டர்டெய்ன்மென்ட் நிறுவனங்கள் சார்பில் தயாரிப்பாளர்கள் எஸ். லக்ஷ்மன் குமார் மற்றும் இஷான் சக்சேனா ஆகியோரின் தயாரிப்பில் இயக்குநர் பி. எஸ். மித்ரன் இயக்கத்தில் நடிகர் கார்த்தி நடிப்பில் தயாராகி உள்ள 'சர்தார் 2' திரைப்படத்தின் இசை மற்றும் முன்னோட்ட வெளியீட்டு விழா சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் நடிகர் சூர்யா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு படத்தின் முன்னோட்டத்தை வெளியிட்டார்.

இயக்குநர் பி எஸ் மித்ரன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'சர்தார் 2' திரைப்படத்தில் கார்த்தி, எஸ். ஜே. சூர்யா, மாளவிகா மோகனன், ஆஷிகா ரங்கநாத், யோகி பாபு, ரஜிஷா விஜயன், நாசர், ஆசிஷ் வித்யார்த்தி, 'நிழல்கள்' ரவி, அச்யுத் குமார், தேவதர்ஷினி, சின்னி ஜெயந்த், ஜீன் பால் லால், பாபு ஆண்டனி, பாலாஜி சக்திவேல் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். ஜார்ஜ் சி. வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு சாம் சி எஸ் இசையமைத்திருக்கிறார். படத்தொகுப்பு பணிகளை விஜய் வேலு குட்டி மேற்கொள்ள கலை இயக்கத்தை ராஜீவன் கையாண்டிருக்கிறார். உளவுத்துறை அதிகாரிகளின் வாழ்வியல் பின்னணியை ஆக்சன் என்டர்டெய்னராக விவரிக்கும் இந்த திரைப்படம் - செப்டம்பர் மாதம் பத்தாம் தேதி முதல் உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.




*இந்நிகழ்வில் தயாரிப்பாளர் லக்ஷ்மன் குமார் பேசுகையில்,*

" சர்தார் 2 எனும் மிகப்பெரிய திரைப் படத்தை திருவாரூர் தியாகராஜர் சுவாமி கோயில் ஆழி திருத்தேர் போல் இழுத்து வந்து ரசிகர்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். இந்தப் படத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு நன்றி. இது எங்களுடைய கனவு படைப்பு. இந்த திரைப்படத்தை இந்த அளவிற்கான தரத்துடன் உருவாக்கியது என்னுடைய சீனபெருஞ்சுவரான கார்த்தி தான்.

*இந்நிகழ்வில் நடிகர் கார்த்தி பேசுகையில்,*

" தமிழ் சினிமா என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமல்ல. தமிழ் சினிமா - தமிழ் நாட்டின் அடையாளமாக இருக்கிறது. இங்கு நாம் அனைவரும் 40 மதிப்பெண் எடுத்தால் போதும் அல்லது 50 மதிப்பெண் எடுத்தால் போதும். ஆனால் நூறு மதிப்பெண் எடுக்க வேண்டும் என்று சிலர் மட்டும் தான் நினைப்பார்கள். இந்தப் படத்தின் குழு அப்படி 100 மதிப்பெண் எடுக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறது. 100 மதிப்பெண்ணிற்கு எழுதுவது என்பது அவ்வளவு எளிதானதல்ல. அதை இந்த படக் குழு கடினமாக உழைத்து உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்த படம் உங்களுக்கு பிடிக்க வேண்டும்... புரிய வேண்டும்... என்பதற்காக ஒவ்வொரு காட்சியிலும் கூடுதல் கவனம் செலுத்தி உருவாக்கி இருக்கிறார்கள். இந்தப் படம் மிகப்பெரிய வெற்றிப் படமாக அமைய வேண்டும். என்றார்.

# ஜியோஹாட்ஸ்டார் யூகே-வில் அறிமுகம்; பொழுதுபோக்கின் பெரிய பிரம்மாண்டத்தும் எல்லையற்ற வாய்ப்புகளையும் கொண்டுவருகிறது

சென்னை, 03 செப்டம்பர் 2026: உலகளாவிய ஸ்ட்ரீமிங் துறையில் ஒரு மிகப் பெரிய மைல்கல்லாக, இந்தியாவின் முன்னணி பொழுதுபோக்குத் தளமான 'ஜியோஹாட்ஸ்டார்', செப்டம்பர் 2 அன்று ஹிரி-வில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்படுகிறது. சர்வதேச அளவிலான தனது விரிவாக்கத்தின் முதல் கட்டமாகத் தடம் பதிக்கும் இந்தத் தொடக்கம், புதிய தொழில்நுட்பம், இன்டராக்டிவ் வசதிகள் மற்றும் ரசிகர்கள் பொழுதுபோக்கை விரும்பிக் கண்டுகளிக்கவும் அதில் பங்கேற்கவும் புதிய வழிகளை உள்ளடக்கிய ஒரு புரட்சிகரமான அனுபவத்தை அறிமுகப்படுத்துகிறது.

500 மில்லியனுக்கும் அதிகமான செயலில் உள்ள பயனர்களைக் கொண்டுள்ள ஜியோஹாட்ஸ்டார், பல மொழிகள், பிரிவுகள் மற்றும் வடிவங்களில் உள்ளடக்கங்களை வழங்கி, உலகின் மிகப் பெரிய பொழுதுபோக்கு தளங்களில் ஒன்றாக ஞூருவெடுத்துள்ளது. மிகப்பெரிய உள்ளடக்கத் தொகுப்பு என்ற நிலையைத் தாண்டி, ரசிகர்கள் பொழுதுபோக்கை எவ்வாறு கண்டறிகிறார்கள் மற்றும் அதனுடன் எவ்வாறு ஒன்றிணைகிறார்கள் என்ற எதிர்பார்ப்புகள் ஸ்ட்ரீமிங் துறையில் மாறி வருகின்றன. இந்தியாவின் இந்த மாற்றத்திற்கு ஏற்ப, தனது பரந்த அளவிலான உள்ளடக்கத்தை அதிநவீன தொழில்நுட்பத்தோடு இணைத்து, ரசிகர்கள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமின்றி பொழுதுபோக்கோடு இணைந்து செயலாற்றும் வகையில் ஜியோஹாட்ஸ்டார்




தன்னை மேம்படுத்தி வருகிறது.

இந்தத் தொடக்கத்தின் மூலம், யூகே முழுவதிலும் உள்ள பார்வையாளர்கள் ஜியோஹாட்ஸ்டாரின் 1,60,000+ மணிநேர பிரீமியம் உள்ளடக்கங்கள் மற்றும் ஆண்டுதோறும் புதிதாக இணையவுள்ள 30,000 மணிநேர உள்ளடக்கங்கள் கொண்ட பரந்த பொழுதுபோக்குத் தொகுப்பை அணுக முடியும். ஜியோஹாட்ஸ்டார் வெறும் ஸ்ட்ரீமிங் தளமாக மட்டுமின்றி, ஒரு பண்பாட்டுப் பாலமாகவும் காலடி எடுத்து வைக்கிறது. இது யூகே பார்வையாளர்களை அவர்கள் விரும்பும் பொழுதுபோக்குகள், கதைகள் மற்றும் கலாச்சாரத் தருணங்களோடு நெருக்கமாக இணைக்கிறது. அதே வேளையில், பன்முகத்தன்மை கொண்ட கதைகள், மொழிகள் மற்றும் கலாச்சாரங்களை நாடித் தேடும் உலக ளாவிய பார்வையாளர்களுக்காகத் தெற்காசியாவின் மிகச்சிறந்த உள்ளடக்கங்களைச் சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் செல்கிறது.

இந்தத் தொகுப்பில் பிளாக்பஸ்டர் திரைப்படங்கள், அசல் தொடர்கள், உண்மை நிகழ்வு சார்ந்த நிகழ்ச்சிகள், விரிவான தொலைக்காட்சித் தொடர்கள் மற்றும் பல அடங்கும்.

# 'பீப்' பட இயக்குநருக்கு பேனா பரிசளித்த திரைப்பட ஜாம்பவான் கே.பாக்யராஜ் : அப்படி என்ன கதை?

சென்னை 03, செப்டம்பர் 2026: 'கட்டு' (Bind) என்கிற குறும்படத்தை இயக்கி பாராட்டுக்களைப் பெற்ற இல.சண்முக சுந்தர் வெள்ளித்திரையில் இயக்குநராக அறிமுகமாகும் படம் 'பீப்'..

இப்படத்தில் ராகவ் ரங்கநாதன் முக்கியக் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். பஞ்சாபைச் சேர்ந்த பிரேர்ணா கண்ணா, யாமினி, சார்பட்டா பரம்பரை பிரியதர்ஷினி, நிதிஷ் வீரா உள்ளிட்டோர் இதில் நடித்துள்ளனர்.

துப்பாக்கிகள் மற்றும் இரத்தம் சிந்தும் காட்சிகள் இல்லாத ஒரு கிரைம் டிராமாவாக, சமூகத்தில் விளிம்பு நிலையில் இருக்கும் மனிதர்களைப் பற்றிய கதையாக இது உருவாகியுள்ளது..

எளிய பின்னணியில் இருந்து வரும், புகைப்படங்களை அல்லது காட்சிகளைத் துல்லியமாக உள்வாங்கும் திறன் கொண்ட ஒரு திறமையான இளைஞன், இந்தியாவின் தலைசிறந்த பிசினஸ் பள்ளிக்குச் செல்கிறான். அவனது நோக்கம் தனக்குப் பிடித்தமான நாயகியைச் சந்திப்பது மட்டுமே. ஆனால் எதிர்பாராதவிதமாக வாழ்க்கையை மாற்றும் ஒரு நிகழ்வு நடக்கிறது. அவனது ஆறு நண்பர்கள் கொண்ட குழு அதிலிருந்து அவனை எப்படி மீட்கிறது என்பதுதான் இந்தப் படத்தின் கதை.

*படம் குறித்து, இயக்குநர் இல. சண்முக சுந்தர் மேலும் கூறும்போது,*

"இது இரத்தம் தெறிக்கும் வன்முறை, சண்டைகள் அல்லது துப்பாக்கி காட்சிகள் நிறைந்த படம் அல்ல.

படத்தின் ஒவ்வொரு நொடியும் ஒரு குற்றச் சம்பவம் நடப்பது போலவோ அல்லது சீரியல் கில்லர்கள் மக்களைக் கொல்வது போலவோ இது இருக்காது.

கொலையும் நடக்கும், ஆனால் கதை அதன் கதாபாத்திரங்கள் மற்றும் அவர்களின் தேடல்களுடன் சுவாரஸ்யமாக நகரும்.

எனக்கு துப்பாக்கிகள், கத்திகள் மீது எந்த எதிர்ப்பும் இல்லை; ஆனால் இந்தப் படத்திற்கு அவை தேவையில்லை என்று நினைத்தேன். இது 'ராட்சசன்' போன்ற படம் அல்ல,



மாறாக 'த்ரிஷ்யம்' மற்றும் 'தொடக்கம்' போன்ற ஜானரைச் சேர்ந்தது" என்று கூறியுள்ளார்.

மறைந்த இயக்குநர், திரைக்கதை மன்னன் கே.பாக்யராஜ் இப்படத்தின் கதைசொல்லியாக குரல் கொடுத்துள்ளார் என்பது ஹைலைட்டான ஒன்று.. ஆரம்பத்தில் அவர் இந்தப் படத்தில் பணியாற்றத் தயங்கினாலும், படத்தின் கதையைப் படித்தவுடன் அவருக்குப் பிடித்திருந்ததால் இயக்குநர் இல.சண்முக சுந்தரை உடனடியாக அழைத்து, ஒரு பேனாவை பரிசாகக் கொடுத்துள்ளார். அந்த அளவுக்கு படத்தின் கதை அந்த திரைக்கதை மன்னனை ஈர்த்துள்ளது.

சமீபத்தில் இயக்குநர் வெங்கட்பிரபு, நடிகர்கள் பிரேம்ஜி அமரன், வைபவ், அஜய் ராஜ், ரம்யா, பிரீத்தா ராகவ் ஆகியோர் பீப் படத்தின் ட்ரெய்லரை வெளியிட்டனர்.

தற்போதுவரை யூட்யூபில் ஒரு மில்லியன் பார்வையாளர்களுக்கு மேல் இதைப் பார்த்து இரசித்துள்ளனர். ஒரு அறிமுக இயக்குநரின் புதிய படத்திற்கு இந்த அளவு வரவேற்பு கிடைத்திருப்பது திரையுலகிலும் ரசிகர்கள் மத்தியிலும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

வரும் செப்-18ஆம் தேதி 'பீப்' படம் திரையரங்குகளில் வெளியாகிறது.

*தொழில்நுட்பக் கலைஞர்கள் விவரம்*

இயக்கம் : இல. சண்முக சுந்தர், இசை : பிரசாந்த் விஹாரி, ஒளிப்பதிவு : பிரதீப் பத்மகுமார், படத்தொகுப்பு : அபிஷேக் மற்றும் விக்னேஷ், ஆக்சன் காட்சிகள் : ராம்குமார், மக்கள் தொடர்பு : ஏ. ஜான்.

# இந்தியாவில் தனது நெட்வொர்க்கை விரிவாக்குவதன் மூலம் உள்ளூர் அளவில் நிரூபிக்கப்பட்ட திட்டங்களுக்கு அளவிடக்கூடிய ஆதரவை வழங்கும் பிலான்த்ரபி ஆசியா அலையன்ஸ்

சென்னை, 03 செப்டம்பர் 2026: ஆசியா முழுவதும் கூட்டாண்மை அறப்பணிகளை ஊக்குவிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட டெமாசெக் அறக்கட்டளையின் ஒரு முன்முயற்சியான பிலான்த்ரபி ஆசியா அலையன்ஸ் (பிஏஏ), தஸ்ரா இந்த கூட்டணியில் ஒரு நெட்வொர்க் பார்ட்னராக இணையும் என்று இன்று அறிவித்தது. பிஏஏ மற்றும் அதன் நிதியளிப்பு உறுப்பினர்கள், ஆரம்பகால குழந்தை கல்வி மற்றும் பெண்களின் பொருளாதார அதிகாரமளித்தலில் உள்ளூர் அளவில் உருவாக்கப்பட்ட தீர்வுகளை விரிவுபடுத்துவதற்காக, இந்தியாவில் உள்ள இரண்டு இம்பாக்ட் வென்ச்சர்லான ராக்கெட் லேர்னிங் மற்றும் ஃபிரான்டியர் இன்னோவேஷன் ஆகியவற்றுக்கான ஆதரவை தனியாக உறுதிப்படுத்தினர்.

இந்த இரண்டு அறிவிப்புகளும், றிகிகி-இன் ஆசியாவை மையமாகக் கொண்ட அதிகாரப்பூர்வ பணியின் முக்கிய சந்தையான இந்தியாவில் அதன் ஈடுபாட்டை ஆழப்படுத்துகின்றன; மேலும் புதிய நிபுணத்துவம் மற்றும் பார்ட்னர்ஷிப்களை அதன் நெட்வொர்க்கிற்குள் கொண்டு வருவதோடு, அளவிடக்கூடிய சாத்தியக்கூறுகளை நிரூபித்துள்ள புரோகிராம்களை நோக்கி பிலாந்த்ரபிக் மூலதனத்தை திருப்புகின்றன.

பிஏஏ-இன் தலைமைச் செயல் அதிகாரி ஷான் சியோ அவர்கள், "இந்தியா மிகவும் கடினமான சில சமூக மற்றும் சுற்றுச்சூழல் சவால்களுக்கு தீர்வுகண்டு வருகிறது, மேலும் அந்த தீர்வுகளில் பல சொந்த நாட்டைத் தாண்டி சிறப்பாகச் செயல்படத் தயாராக உள்ளன. எங்களது உறுப்பினர்களின் நிதி மற்றும் நெட்வொர்க்குகளை இந்தியாவிற்குள் கொண்டுவருவதும், அதே நேரத்தில் இந்திய அமைப்புகளுக்கு ஆசியாவின் பிற பகுதிகள் மற்றும் குளோபல் சவுத் முழுவதும் பார்ட்னர்ஷிப்களை உருவாக்குவதற்கான வழியை வழங்குவதுமே பிஏஏ-இன் பங்கு ஆகும். அந்தத் தொடர்புகளை ஆழப்படுத்துவதன் மூலம், நிரூபிக்கப்பட்ட மாடல்கள் மேலும் லட்சக்கணக்கான மக்களைச் சென்றடைய நாங்கள் உதவ முடியும்" என்று கூறினார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்